TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XII.] **MAY, 1912-௵ மே௴.** [இலக்கம் 2.

அமெரிக்கா பறவைகளின் பாதுகாப்பு.

வட அமெரிக்காக் கண்டத்தின் விசித்திரமான பறவை யினங்களின் பாதுகாப்பின் பொருட்டு ஐக்கிய மாகாணங்களின் துரைத்தனத்தார் செய்துகொண் டிருக்கிற புகழத்தக்க பிரயத்தனங்களைக் கேட்க யாவருக்கு மளவில்லாத சந்தோஷ முண்டாகும். ஐக்கிய மாகாணங்களில் பறவைகளை வைத்து சம்ரக்ஷிக்கிறதற்காக ஐம்பத்தொன்று வீடுகள் கட்டப்பட் டிருக்கின்றன. அவைகள் அநேகமாய்ச் சிறு தீவுகளாக பிளாரிடா (Florida) மாகாணத்தின் கரையோரத்தில் தொடங்கி மெக்சிகோ குடாக்கடல் (Gulf of Mexico) வரையிலும் மேற்கே பஸிபிக் மகா சமுத்திரத்தின் கரையோரத்திலும் கட்டப்பட் டிருக்கின்றன. அவ்வாசிரயங்களில் அத்தேசத்திற்கே பிரதானமான கபில நிறமுள்ள நாரை, நுரைப்பட்சி முதலிய பலவிதமான பக்ஷியினங்களை வளர்ப்பதற்கு ஏராளமாய் இடமிருக்கிறது. இம்மாதிரி தீவுகளில் முதலாவது கி. பி. 1903-ம் வருஷத்தில் கட்டப்பட்டு "பெலிகன் ஐலண்ட்" அதாவது "நாரைத் தீவு" என்று பெயரிடப்பட்டது. அதற்கடுத்த வருஷத்தில் லூசியானு (Lousiana) மாகாணத்தில் "பிரடன் ஐலண்ட்" என்றொரு தீவு கட்டப்பட்டது. வரவர வருஷாவருஷம் நான்கு, ஐந்து வீதமாகக் கட்டப்பட்டுத் தற்காலம் ஐம்பத்தொன்றிற்குக் குறையாமல் தீவாசிரயங்களிருக்கின்றன.

அமெரிக்காக் கண்டத்தின் பறவைகளின் வாழ்வுக்கு எவ்வளவு அபாய முண்டாயிருந்ததென்பதை, கி. பி. 1903-ம் வருஷத்தில் அவைகளின் தொகை அதற்குப் பதினைந்து வருஷங்களின் முன்னிருந்ததில் சரிபாதிக்குக் குறைந்துவிட்ட தென்பதைக்கொண்டு ஊகித்துக்கொள்ளலாம். சில வினங்கள் நிர்மூலமாகத் தொலைக்கப்பட்டுவிட்டன. சில வருஷங்களுக்குமுன் கூட்டங் கூட்டமாய்த் திரிந்துகொண்டிருந்த பனி நாரை (Snowy-heron) யினத்தில் இப்பொழுது ஒரு பறவை யகப்படுவதுவெகு பிரயாசையாயிருக்கிறது. அவைகளிற் சில இவ்வாசிரயங்களில்மட்டுமிருக்கின்றன. ஐம்பது வருஷங்களுக்கு முன் காட்டுப்புறு விசேஷமா யிருக்கும். அவை கும்பலாய்ப் பறந்து செல்லும்போது மேகத்தைப்போல் சூரியனை முழுதும் மறைத்து விடும். தற்காலத்திலோ அப்பறவையின் கூடு ஒன்றைக் கொண்டுவருகிறவர்களுக்கு அறுபது பவுன் அளிப்பதற்கு ஐக்கிய மாகாணத்துத் துரைத்தனத்தார் உடன்படும்படியாகிவிட்டது. இன்னம் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் கரையோரங்களிலேராளமாய்க் கிடைத்துக்கொண்டிருந்த வொருவகை வாத்து, கானங்கோழி முதலிய சில ஜாதிகளு மிக்கதியையே யடைந்திருக்கின்றன.

அத்தேசத்துப் பறவைகளுக்கு இந்த துக்ககரமான நிலைமை இறகு வியாபாரிகளால் வந்தது. சில வருஷங்களுக்குமுன் விசேஷமாயிருந்து இப்பொழுது அபூர்வமாய்க் காணப்படுகிற பறவை யினமெல்லாம் அவை

களின் இறகுகளுக்காக தூர்த்தமாயும் மிக வும் குரூரமாயுங் கொல்லப்பட்டு வரு கின்றன.

முற்கூறப்பட்ட பனி நாரையைப்பற்றி யோசிக்கையில், கி. பி. 1880-ம் வருஷத்தில் அவ்வினத்தில் சுமார் முப்பதுலக்ஷம் பறவை களிருந்ததாகச் சொல்லுகிறூர்கள். அவை களின் சிறகுகளை யெடுக்கிறது கொடுமையே யொழிய வேறில்லை. ஏனென்றால், அவை களுக்கு அந்த அழகான தோகை அவை முட்டையிடுகிற பருவத்தில்தான் நன்றாய் முளைத்திருக்குமாகையினால் அச்சிறகுகளை யெடுத்துக்கொள்ள அவைகளைக் கொன்று அவைகளின் குஞ்சுகளைப் பராதீனமாய் விட்டு அவைகள் கூட்டிலேயே யிறக்கும்படி செய்யத்தான் வேண்டியது. சில வருஷங் களுக்குமுன் பிளாரிடா மாகாணத்தில்மட் டும் முப்பதினாயிரம் பறவைகளைப் பிடித்துக் கொண்டு சென்றூர்களாம். அவைகள் விசே ஷமாய்ச் சஞ்சரித்த டம்பா குடாக்கட லோரத்தில் சில மாதங்களுக்குமுன் போய்ப் பார்த்தவர்கள் அவைகளின் கூடுகளில் ஒன்று கூட அகப்படவில்லையென்று சொன்னூர்கள்.

பறவைகளின் ஆசிரயங்கள் கட்டப்பட்ட பிறகு, நிர்மூலமாய்ப் போகவேண்டிய ஸ்திதி யிலிருந்த அநேகஜாதிப் பறவைகள் பாது காக்கப்பட்டதோடு, அவை நாளாவட்டத் தில் அதிகரித்துக்கொண்டு மிருக்கின்றன. இந்த நற்காரியத்தின் கீர்த்தியெல்லாம் அக் காலத்தில் ஐக்கிய மாகாணங்களின் ஆதிபத் தியத்தை வகித்த மிஸ்டர் ரூஸ்வெல்ட் துரை யவர்களுக்கே யுரியதாம்.

பக்ஷிகளி னபிமானிகள் யாவரும் அந்த துரைக்கேயன்றி அவ்வாறு பக்ஷிகளைச் சம் ரக்ஷிக்கவேண்டிய தவசியமென் றெண்ணிய தற்காகப் பல வேற்பாடுகள் செய்துவரு கிற நாஷனல் அஸோஷியேஷன் ஆப் ஆடு பான் ஸொஸைடீஸ் (National Association of Audubon Societies) என்கிற சங்கத்தாருக்கும் வந்தனஞ் செலுத்தற்பால ரா யிருக்கின்றனர். இச்சங்கத்தி னங்கத் தினர் ஆயிரத்துக்கு மேற்பட்டிருக்கிறூர்கள். அவர்கள் வருஷ மொன்றுக்கு ஒரு பவுன் விழுக்காடு சந்தா கொடுக்கிறூர்கள். அவ் வாறு சேகரிக்கிற பணத்தைக்கொண்டு அத் தேசத்துப் பறவைகளில் எந்தெந்த வினங் கள் க்ஷீணித்து வருகின்றனவென்பதையும் அவை எந்தெந்த விடங்களில் ஜெனிக்கின் றன வென்பதையும் விசாரித்துத் தெரிந்து கொண்டு, அவைகளின் பாதுகாப்பின் அவ சியத்தைப்பற்றித் துரைத்தனத்தாருக்கு அறிவிக்கிறூர்கள். அதுவுமன்றி, அவை குஞ்சு பொரிக்கிற பருவங்களில் அந்தத் தீவுகளில் அவைகளை யாருந் திருடிக்கொ ண்டு போகாமலிருக்கும்படி அங்கங்கே காவ லாட்களையும் நியமிக்கிறூர்கள்.

முதல் முதல் கட்டப்பட்டதாகக் கூறப் பட்ட "பெலிகன் ஐலண்ட்" என்னுந் தீவு பிளாரிடா மாகாணத்தில் இந்தியன் நதிக் (Indian River) கரை யோரத்தி லிருக் கிறது. அதில் ஊதா நிறமுள்ள நாரைகளை வளர்த்து வருகிறூர்கள். அத்தீவைப் போய்ப் பார்க்க வெகு நேர்த்தியாயிருக்கும். அது சுமார் மூன்று ஏகரா விஸ்தீர்ண முள்ள தாய் நீர்மட்டத்திற்கு மூன்று அடி உயரம் கட்டப்பட் டிருக்கிறது. அத்தீவி லிறங்க விரும்புகிறவர்கள் அதன் முக்கிய காவலாளி யினிடத்திலிருந்து எழுத்துமூலமாய் அனு மதி பெறவேண்டும். அந்த நாரைகளைக் கவனித்துப் பார்க்கும்பொருட்டு அநேகஸ் தாவர சங்கம சாஸ்திரிகள் அங்கே போயி ருக்கிறூர்கள். தோலடிகளுள்ள புள்ளினங் களிலெல்லாம் ஊதா நாரை மிகவும் மன மகிழ்ச்சியுள்ளதும் சீக்கிரத்தில் நேசிக்கத் தக்கதும் இனப்பிரியமுள்ளதுமான பறவை யென்று சொல்லுகிறூர்கள். தற்காலத்தில் இரண்டாயிரம் நாரைகளும் தொள்ளாயிரத் தெண்பது கூடுகளும் அந்தத் தீவி லிருக்கின் றனவாம். அவை முட்டையிடுகிற பருவத் தில் அங்கேயே அகப்படுகிற புல் சிறு கொம் புகள் முதலியவற்றூல் கூடுகளைக் கட்டிக் கொண்டு அவைகளில் வசிக்கும். பிப்ரவரி மாதத் தொடக்கத்திலிருந்து மே மாதத்தி னிறுதிவரையிலும் அவை முட்டையிடும் பருவமே. மார்ச்சு மாதத்தில், ஒன்றூே டொன்று சேர்ந்தாற்போல் வரிசை வரிசை யாகக் கூடுகள் காணப்படும். அவைகளிற் சிலவற்றில் முட்டைக ளிருக்கும்; சிலவற் றில் நூதனமாய்ப் பொரித்த குஞ்சுக ளிருக் கும்; சிலவற்றில் பாதி வளர்ந்த குஞ்சுக ளிருக்கும். அக்குஞ்சுகளின் மெல்லிய இற குகள் பஞ்சைப்போல் வெண்மையாயிருக் கும். அவைகளைப் போஷிப்பதற்காக அவை களின் தாய்மார்கள் வெகுதூரஞ் சென்று

வெண்ணிறமுள்ள ஒருவித சிறு மீன்களைப் பிடித்துக்கொண்டு வருகின்றன. ஒவ்வொரு குஞ்சுக்கு ஏழு அல்லது எட்டு மீன்கள் தேவையாயிருக்கும். அதைத் தின்றுவிட்டுச் சாயங்காலத்தில் பெரிய பறவைகளுடன் அவைகளும் தண்ணீரண்டை போய்ப் பறக்கக் கற்றுக்கொள்ளும். நன்றாய் வளர்ந்த ஒரு ஊதா நாரை நாற்பத்தொன்பது அங்குல நீளமும், இறகுகளை விரித்த நிலைமையில் ஆறு அடி அகலமுமா யிருக்கும். அதன் நிறம் அதிக நேர்த்தியானது. அந்த நிறம் நன்றாய்ப் படிவதற்கு பறவைக்கு மூன்று வயதாகவேண்டும்.

அந்தப் பக்ஷி யாசிரயங்களைக் கட்டியிருக்கிற தீவுகளெல்லாம் வியவசாயம் முதலிய எந்த வேலைக்கு முபயோகப்படாமல் பல சதுர மைல்வரைக்கும் விரிந்துகிடக்கிற இடங்களே. அவைகளிலெல்லாம் மிகப் பெரியது அறுநூறு சதுர மைல் விஸ்தீரணமுள்ள "லாமத் ஏரி ஆசிரயம்" (Klamath Lake Refuge). அதில் பெரும்பான்மை ஓதமான நிலம்.

அது "காலிபோர்னியா" (California) மாகாணத்தின் வடகிழக்கி லிருக்கிறது. அதில் விசேஷமாய் வெள்ளை நாரைகளைப் பரிபாலித்து வருகிறார்கள். இந்த நாரை மேலே கூறப்பட்ட ஊதா நாரையைக்காட்டிலும் இருமடங்கு பெரியதாம். அது தன் சிறகுகளை விரிக்கும்போது பார்த்தால், அவை எட்டு அல்லது ஒன்பது அடி அகலமிருக்குமாம். ஒரு காலத்தில் இந்தவினத்துப் பக்ஷிகள் லக்ஷக்கணக்கா யிருந்தனவாம். இப்பொழுது இவ்வாசிரயங்களி லிருப்பவை போக வேறு அகப்படுவதேயில்லை. இவ்வாசிரயத்தில் கார்மோராந்து (Cormorants) என்னும் ஒருவகைக் கடற்பறவைகளையும் ஆதரித்து வருகிறார்கள்.

"பிரடன் ஐலண்டு" என்கிற மற்றொரு தீவு அந்த விடத்தில் நடந்துகொண்டிருந்த வாத்துக் கொலையைத் தவிர்ப்பதற்காகவே கட்டப்பட்டது. இவ்வாறே அங்கங்கே கட்டப்பட்டிருக்கிற தீவுகள் பறவை யினங்களைக் காப்பதற்கேயன்றி அவைகளைப் பெருக்குவதற்கு முபயோகமா யிருக்கின்றன.

அமெரிக்காவைப்போலவே மற்றத் தேசங்களிலும் சந்ததியற்றுப் போய்க்கொண்டிருக்கிற பறவைகளின் அபிவிருத்தியைப்பற்றி அந்தந்த தேசத்திலுள்ளவர்கள் கவலை யெடுத்துக்கொள்ள முயல்வார்களென்று கோரப்படுகிறது.

தேச பாஷையிலெழுதிய மேலான வியாசம் I.

செல்வமான மிருகங்களை வளர்க்கும் விதம்.

செல்வமாய் மிருகங்களை வளர்க்கவேண்டிய விதம் எப்படி என்பதைப்பற்றி எழுது முன் ஆசையென்பது என்னை? அஃது யாரிடத்தே யுடையது? அதனை யடைய அர்கமான பாத்திரங்கள் எவை? மிருகம் என்ற பதம் எவை யெவைகளைக் குறிக்கும்? மிருகங்களிடத்தில் என் ஆசை பாராட்டவேண்டும்? என்பவைகளைப்பற்றிச் சற்றுக் கவனித்தல் முக்யமானதேயாம்.

ஆசையென்பது, பிறரிடத்திலிருந்து பிரயோஜனம் கிடைக்கினும் கிடைக்காவிடினும் ஒரு விஷயத்திலோ அல்லது ஒரு ஜீவராசியிடத்திலோ மற்றொரு ஜீவராசி கொள்ளும் பற்றுதல்,—என்று பொருளாகும். இப்பற்றுதல் ஒவ்வொரு ஜீவராசியினிடத்தினும் ஸகஜமாய் உள்ளதானாலும் ஈசுவர சிருஷ்டியில் பிரதம ஸ்தானத்தைப் பெற்றுநிற்கும் மனிதனிடத்தில் அதிகமாய் இருத்தல்வேண்டும். ஏனென்றால் தயை பரிதாபம் ஆசைமுதலிய குணங்கள் அற்ற மனிதன் ஜீவராசியிலிருப்பதற்கே அர்கனல்ல. ஆசைக்குப் பாத்திரங்கள் உயிர்வகை பலவுமே. மனிதன் தன்னைப் பிறர் நேசிக்கவேண்டும், தான் பிறர் கண்ணில் மண்ணைத் தூவியாவது பிறருடைய ஆசையைக் களவாடவேண்டும் என்று எண்ணுகிறான். இப்படி மனிதனே எண்ணுங்கால் பிறவலிய ஜீவன்கள் தமக்கிடும் தீங்கினைத் தடுக்கத் திறமையற்றமையால் மனமும் மெய்யும் நொந்து சாகும் எளிய மிருகங்கள் எண்ணுவதற்குத் தடையுமுண்டோ!

ம்ருகம் என்ற பதம் ஸம்ஸ்க்ருதத்தில் சாவு என்ற பொருளைக் கொடுக்கும் ஓர் தாது (Root) வினின்று உண்டானது. ம்ருகம் என்ற பதத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லாகிய அனிமலும் (Animal) லாட்டின் பாஷையில் உயிர் என்று பொருள் கொடுக்கும் அனிமா என்ற பதத்தினின்றே

யானது. ஆகவே, ஜனித்து மரிக்கும் பலவும் மிருகங்களே. ஆகிலும் பொதுவாய் இப்பெயர் மனிதனுக்கு வழங்கிவரவில்லை. சாதாரணமாய் மிருகங்கள் ஒன்றுக்கொன்று ஆசை பாராட்டுவது அபூர்வமானாலும் பலவித மிருகங்களை வளர்ப்பவன் மனிதனேயன்றி மிருகங்களில்லை யாகையால், தம் வெறுப்பு விருப்புக்களை வெளிப்படையாய்ச் சொல்லித் தம்மிஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொள்ளத் திறமையற்ற இளைய ஊமைச் சகோதரர்களைச் செவ்வனே நடத்தி அவைகள் வருத்தமுறாமலிருக்கும்படி செய்ய வேண்டியது, ஜீவராசிகளுள் மூத்த சகோதரனாய் விளங்கும் மனிதனுடைய முக்ய கடமை.

பொதுவாய் மனிதனுக்கு ஒரு மிருகத்தினிடத்தே ஆசை உண்டாக அதனிடத்தில் கண்ணைக் கவரும் வனப்பு அல்லது காதைக் களவாடும் கானம் அல்லது மனிதனுடைய சிரமத்தைக் குறைக்கும் சக்தியிருப்பது ஸகஜம். ஏனெனின், ஈசன் ஜீவராசிகளை சிருஷ்டிக்கும்போதே நிஷ்ப்ரயோஜனமாய் ஒன்றையும் சிருஷ்டிக்கவில்லை யாகையால் மேற்சொன்ன மூன்று குணங்களில் ஒன்றாவது ஒவ்வொரு ஜீவராசியின்கண்ணும் ஊன்றியிருத்தலைக் காணலாம்.

மேற்கூறிய விஷயத்திற்கு உதாரணமாகக் கிளியைக் குரலிற்கும், மானை வனப்பிற்கும், கடா, காளை முதலியவைகளை உழவிற்கும் வளர்க்கின்றோம். நம்முடைய லாபார்த்தமாக வளர்க்கும் மிருகங்களுக்கும் முதலில் நம் ஆசையைக் காட்டி, அளவு குன்றாமல் ஆகாரம் போட்டு ஆனந்தப்படுத்தி வேலை வாங்கிப் பிறகு அர்த்தவிஷயத்தை யோசித்தால், மிருகங்களும் தேகவலிமை குன்றாமல் தளதளவென்றாகிப் பார்ப்போரை மயக்கி நேத்திரானந்தத்தைக் கொடுத்து வளர்ப்பவனுடைய ஆசையை வளர்க்கும் என்பதிலும் அவைகள் வலிவுள்ளவைகளாக விருப்பதால் இலகுவாகவே ஜாஸ்தி காரியங்களைச் செய்யக்கூடும் என்பதிலும் ஐயமில்லை.

இப்படிப் புகலுவதால் பூஞ்சோலைகளில் மனோரஞ்சிதமாய்ப் பாடும் கிளிகளும், காட்டகத்தே குச்சிக்கால்களோடு குதித்தோடும் குட்டிமான்களும் மண்டிபோட்டு முண்டி ஏர் இழுக்கும் கடாக்களுமேயொழிய வேறு மிருகங்கள் ஆசைக்கு அர்கமில்லையென்று எண்ணவேகூடாது.

மிருகங்களை யடித்துச் சீராட்டிப் பழக்குவது சிலருடைய வழக்கம். பிள்ளைப்பேறின்றி வெகுகாலம் வருந்தி, அந்திகாலத்தில் அருமையாய் அடைந்து கண்ணுக்குக் கண்ணாய் காத்துச் சீராட்டித் தாலாட்டி வளர்க்கும் குழந்தைகளைக்கூட, அடித்து அழவிட்டுப் பிறகு முத்தமிட்டுச் சிரிப்புண்டாக்கிக் களிக்கின்றனர் பலர். இப்படிப்பட்டவர்கள் மிருகங்களிடத்தில் பக்ஷமாய் இருக்கவில்லை யென்று முறையிடுவதும் சரியோ! இவர்களுக்குக் குழந்தைகளின் மேலும் மற்றும் ஜீவராசிகளின் மேலும் ஆசையில்லை என்று சொல்லவேகூடாது. ஏனென்றால் இவர்களிடத்தில் ஆசைக்கு அணுவளவும் குறைவில்லை. பின்பு இவர்கள் ஏன் மிருகங்களை சிரமப்படுத்துகிறார்கள் என்றால், தம்மிடத்தில் இருக்கும் ஆசையை காண்பிப்பதோடு நின்றுவிடுவது கூடாது. மிருகங்களை எப்படி வளர்க்கவேண்டுமென்பதையும் சற்றுக் கவனிக்கவேண்டும் என்பதேயாம்.

கிளி, குரங்கு முதலியவைகளைப் பலர் பலவிதமும் அடித்துப் பழக்குகின்றனர். கிளியையும் குரங்கையும் மனிதன் பெரும்பாலும் வளர்ப்பது ஆசையின் பொருட்டேயன்றி லாபத்தைக் குறித்தல்ல. பிள்ளையற்றவர்கள் கிளியை வளர்த்து அதற்கு நம் பாஷையைக் கற்றுக்கொடுத்து ஒழிந்த நேரங்களில் அவைகளோடு பேசிக் காலங்கழிக்கின்றனர். ஒழிவு நேரத்திற்கு உத்தம சிநேகிதனான கிளியை எப்படி வளர்க்கிறார்கள்? முதலில் கிளிக்குஞ்சைத் தோப்புகளில் மரப்பொந்தில் தேடி யெடுத்து, இறகை வெட்டிப் பறக்கமுடியாமல் செய்து, பஞ்சரத்தில் அடைத்து, ஆகாரம் போடுகிறார்கள். ஐயோ! ஆகாரமாவது சரியாய்ப் போடுகிறார்களா! அதுவுமில்லை! இப்பக்ஷியை அதன் இனத்தினின்று பிரித்துவைப்பது எதற்காக? எல்லாம் நம் அன்புச் செலவிற்கும் ஆனந்த விருத்திக்குமேயல்லாது வேறில்லை. இப்படி இருக்க, மனிதன் எப்படி இப்பக்ஷிக்கு ஒரு உண்டைச் சோறும் ஒரு கொட்டங்கச்சி நீரும் வார்க்கத் துணிகிறான்! இப்படிப் பக்ஷி வளர்ப்பதைவிட வளர்க்காமலிருக்கலாம். கிளியும் தானுண்டு பழகாப்

பிண்டத்தை ஏன் வெறுக்காது? ஏன் தன் ஜன்ம வனத்தை விரும்பாது? ஏன் பாழும் பஞ்சரத்தை அலுக்காது?

கிளி வளர்ப்பதில் இவ்வளவு கஷ்டமிருப் பதால்தான் சில பெரியோர்கள் கிளி வளர்ப் பதே பாபகரமான தென்கிறார்கள். இப்ப டிச் சொல்வதின் உண்மை என்னவென் றால், ஒருவன் கிளியைச் சரியாய் வளர்ப்பது அசாத்யமான விஷயம் என்பதும், கிளி யைச் சாகும்படி விட்டுவிட்டால் ஓர் சிசு ஹத்தி பண்ணின தோஷம் கிடைக்குமென் பதால் பிள்ளை வளர்ப்பது பெரிதல்ல கிளி வளர்ப்பது பெருங் கஷ்டமேயாம். கிளி வளர்த்தால் பிள்ளையை வளர்ப்பதைவிடப் பலமடங்கு கவலையுடன் வளர்க்கவேண்டி யிருப்பதால், அதற்குக் கிளிப்பிள்ளை யென்று பெயர் கிடைத்ததெனப் பலர் சொல்லு கின்றனர்.

சரியானபடி ஆசையோடு வளர்த்தால், கிளிக்குக் கூண்டு எதற்காக? வளர்ப்பவன் பின், ஏன் வளர்ப்புஜந்து தானாகச்செல்லாது? ஆகவே கிளி குருவி முதலியவைகள் வளர்ப் பவர்கள் அவைகள் யதேச்சையாய்க் காடுக ளில் திரிந்து வளர்ந்தால் எவ்வகை யாகாரங் களைப் புசித்து உல்லாசமாய் உயிர்வாழ்ந்து வருமோ அவைகளைச் சேகரித்து அவைக ளுக்கு அளிப்பதற்கு அலுக்கவேகூடாது. அப்படிச் செய்தால்தான், பக்ஷிகள் களித்துக் கொழுக்கும். அவைகள் வசிக்கும் இடம் அழகாயும் சுத்தமாயும் இருக்கவேண்டும். அல்லாதபட்சத்தில் அவைகள் கூண்டின் சாளரம் எப்பொழுது திறந்திருக்கும், எப் பொழுது அதனின்று தப்பி ஓடலாம் என்று எண்ணாவோ?

யுத்தகாலங்களிலும் மற்றும் பல சமயங் களிலும் புறாக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடத்திற்குக் கடிதங்கள் கொண்டுசேர்க்கப் பழக்கப்படுகின்றன வென்றால், சரியானபடி ஆகாரம் கொடுத்துக் கடுமை காட்டாமல், அன்புபாராட்டி வளர்த்தால், பக்ஷிகள் எவ் வளவு மனிதனுக்குப் பிரதிப் பிரயோஜனத் தையும் கொடுக்கக்கூடியவைகளா யிருக்கின் றனவென்பது நன்கு புலப்படுகின்றது.

(இன்னும் வரும்.)

ஜீவ ஹிம்ச நிவாரண சங்கத்து ஜந்து விநோதக் காட்சி—1912.

வருஷந்தோறும் டிசெம்பர் மாதத்தில் நடந்துவருகிற சென்னை ஜீவ ஹிம்ச நிவா ரணச் சங்கத்து ஜந்து விநோதக் காட்சி கடந்த டிசெம்பர்மாதத்தில் டில்லியில் காரொ னேஷன் தர்பார் நடந்ததின்நிமித்தம் இவ் வருஷம் ஜனுவரி மாதத்தில் வைத்துக் கொள்ளப்பட்டது. அக்காட்சிக்கு மஹிமை பொருந்திய கவர்னரவர்களும் அவருடைய தேவியாரும் பரிபாலகர்களா யிருந்தார்கள். அக்காட்சி அதி விமரிசையாக நடந்ததுடன் அக்கிராசனாதிபதியின் வேண்டுகோளுக் கிணங்கி, அநேகர் வெகுமதிக எளிக்கும் விஷயத்தில் திரவிய சகாயம் புரிந்தார்கள்.

அக்காட்சிக்கு மகிமைபொருந்திய கவர்ன ரவர்கள் ஏதோ அசந்தர்ப்பத்தினால் வர வில்லை. லேடி கார்மைகேல் அவர்கள்மட் டும் சுமார் 5 மணிக்கு விஜயஞ்செய்தார் கள். அவர்களைச் சங்கத்தின் தலைவராகிய ஸர் ஆர்னால்டு வொயிட் (Sir Arnold White) துரையவர்கள் எதிர்கொண்டழை த்து அக்காட்சியின் பல பாகங்களுக்கும் அழைத்துச் சென்றார். அத்தேவியார் அங் கங்கே காணப்பட்ட விநோதங்களைக் கண்டு அதிக திருப்தியடைந்தார்கள்.

அக்காட்சிக்குக் கொண்டுவரப்பட்ட ஜந் துக்கள் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டு, அந்தந்தப் பிரிவில் முன்னமே ஏற் படுத்தப்பட்ட ஜட்ஜிகளின் அபிப்பிராயப் பிரகாரம் மேலான பிராணிகளென்று நிச் சயிக்கப்பட்டவைகளைக் கொண்டுவந்தவர் களுக்கு அவரவர்க்குத் தக்கபடி வெகுமதிக ளளிக்கப்பட்டன. அநேகர் தாங்கள் கொண் டுவந்த ஜந்துக்களுக்கு வெகுமதியொன்றுங் கொடுக்கவில்லையென்று விசனமடைந்தார் கள். அவர்களில் முக்கியமானவன், நேர்த் தியான கத்தியவார் மட்டக்குதிரை யொன் றைக் கொண்டுவந்த ஒரு மஹம்மதியன். அவன் அந்தக் குதிரையை ஆமெடாபாத்தி லிருந்து கொண்டுவந்ததாகச் சொன்னான். அவனுக்கு வெகுமதி யில்லையென்று சொன் னவுடன், அவ னதிக துக்கத்துடன் சென்று விட்டான்.

ஜட்கா மட்டக்குதிரைகளில் வெகுமதி பெற்றவைகள் அதிக நேர்த்தியாயிருந்தன.

சாதாரணமாய் ஜட்காக் குதிரைகளுக்குத் தான் அதிக ஹிம்சை புரிவது சகஜமாயிருந்தபோதிலும், அக் குதிரைகள்மட்டும் வெகு ஜாக்கிரதையுடன் வளர்க்கப்பட்டவையாயிருந்தன. வண்ணாரக் கழுதைகளில் இரண்டு மூன்று கழுதைகள்தவிர மற்றவையெல்லாம் பரிதபிக்கத்தக்க நிலைமையில்தா னிருந்தன. எல்லாருடைய கவனத்தையும் கவரத்தக்கதாயிருந்தது நாய்களின் வகுப்பு; நாகரிகமுள்ளவர்களால் வளர்க்கப்பட்டதும் ஏழைகளால் வளர்க்கப்பட்டதும் மற்றும் இராணுவச் சேவகர்களால் வளர்க்கப்பட்டதுமான பலவகை நாய்கள் கொண்டு வரப்பட்டன. இராணுவச் சேவகர்களால் வளர்க்கப்பட்டவற்றில் நேர்த்தியானதற்கொரு வெகுமதியும் ஏழைகளால் வளர்க்கப்பட்டவற்றில் உயர்ந்த நாய்க்கென்று ஒரு வெகுமதியும் அங்கே கொண்டுவரப்பட்ட நாய்களிலெல்லாம் மேலானதற்கு ஒரு வெகுமதியும் அளிக்கப்பட்டன. போர்ச் சேவகர்களால் கொண்டுவரப்பட்ட நாய்களெல்லாமே நல்ல ஜாதியைச் சேர்ந்தவையாயும் நன்றாய் வளர்க்கப்பட்டவையாயுமிருந்தன.

பசுக்களில் எல்லாம் நல்ல ஸ்திதியிலிருந்தன. வெகுமதி பெற்றவைகள் சிரேஷ்டமானவையா யிருந்தன.

வண்டி யிழுக்கிற மாடுகளில் அநேகம் நன்றாயிருந்தன. சென்னைக் கார்பொரேஷன் (The Corporation of Madras) எருதுகள் அநேகம் கொண்டுவரப்பட்டன. அவைகளிற் சிலவற்றிற்கு வெகுமதியும் கிடைத்தது. கூலி வண்டிக்காரர் சிலர் நல்ல ஜதைகளைக் கொண்டுவந் திருந்தார்கள். அவை உருவத்தில் மட்டமாயிருந்தபோதிலும் எவ்வளவு கஷ்டமானாலும் பொறுமையுடன் உழைக்கத்தக்க வல்லமை பொருந்தினவாயிருந்தன. நாய்தவிர இதர ஜந்துக்களில் தன் எஜமானனைப் பின்தொடர்ந்து செல்கிறவைகளுக்காகக் கொடுக்கப்பட்ட வெகுமதிகள் எல்லாம் அநேக ஆடுகளுக் களிக்கப்பட்டன. அவைகள் தங்களுடைய எஜமானர்களிடத்தி லதிக விசுவாசமுள்ளவையாகக் காணப்பட்டன.

கோழித் தொழுவங்கள் பறவைகளின் கூடுக ளிவைகளில் மேலானவற்றிற்கு வெகுமதிகள் மிஸ்டர் A. கிரீனல் (Mr. A. Greenall) துரையவர்களுக்கும் மிஸ்ட்ரஸ் டிவிக் (Mrs. Twigg) துரைசானிக்கும் கிடைத்தன. பக்ஷியினங்களில் ஜாவாக் குருவிகள், அழகான புறாக்கள் முதலிய பல நேர்த்தியான பக்ஷிக ளிருந்தன. நானாவித் மிருகங்களென்று சேர்க்கப்பட்ட வகுப்பில் ஒரு நாயினா லிழுக்கப்பட்ட வண்டியை யொரு குரங்கு ஓட்டிக்கொண்டு சென்றது அதிக விநோதமாயிருந்தது.

எருதுகளுக்குக் கஷ்டமில்லாதபடி நுகம் பூட்டுவதற்கு நல்ல உபாயம் கண்டுபிடிக்கிறவர்களுக்கென்று நியமிக்கப்பட்ட வெகுமதி சென்னை வெடரினெரி காலேஜைச் சேர்ந்த மிஸ்டர் வி. கிருஷ்ணமூர்த்தி யவர்களுக் களிக்கப்பட்டது. அவர் எருதுகளுக்கு நுகத்தடியைச் சரியானபடி பூட்டாத காரணத்தினால் உண்டாகிற கஷ்டங்களையெல்லா மெடுத்துக் கூறினார். அவைகளில் முக்கியமானது எருதுகளின் கழுத்தி லுண்டாகிற நுகப்புண். அந்தப் புண்ணினால் அவைகளுக்கு வருகிற மற்ற நோய்களைக் காட்டிலும் அதிக துன்பமுண்டாவதுடன் அதனால் அநேக எருதுகள் இழுப்புவேலைகளுக்குச் சிறிதும் பிரயோஜனமற்றுப் போய் விடுகின்றன. எருதின் கழுத்தில் எப்பொழுதும் நுகத்தடி தேய்ந்துகொண்டே யிருப்பதினால் எரிச்சலும் நமைச்சலு முண்டாகிக் கட்டிகள் புறப்படுகின்றன. அது போதாமல் எருதுகள் செல்லுகிற பாதைகள் கரடுமுரடாயிருந்தால் நுகத்தடி பின்னு மதிகமாயசைந்தசைந்து அப்புண்களின்மேல் தேயும். இதையெல்லாம் தவிர்க்கும்பொருட்டு மிஸ்டர் V. கிருஷ்ணமூர்த்தி யவர்கள் சொல்லிய சில உபாயங்களில் முக்கியமானவை.

1. எதிரில் வருகிற வண்டி யல்லது ஏதாவது பாரமான வஸ்துக்கள் வந்து தாக்கினால் அதைத் தடுப்பதற்காக வொரு முட்டம் கட்டிவைத்தல்.

2. மேட்டிலிருந்து சாய்ப்பான விடங்களில் செல்லும்போது ஜாக்கிரதையாய்ச் செல்லுதல்.

3. பாரமுழுவதும் கழுத்தின்மேலேயே விழாமல் முசுப்பின்மேல் கொஞ்சம் பாரம் விழும்படிக்கு ஒரு ஏற்பாடு செய்தல்.

4. எருதுகளின் கழுத்துக்கு மிருதுவான சுமடு கட்டுதல்.

5. வண்டி யசையும்போதெல்லாம் நுகத்தடி எருதின் கழுத்தில் அழுத்தமாய்த் தேயாமலிருக்கும்பொருட்டு நுகத்தடியை யெப்பொழுதுமே சிறிது அசைந்துகொண்டிருக்கிற நிலைமையி லிருக்கும்படிக் கொரு ஏற்பாடு செய்தல்.

இந்த வெகுமதி நியமிக்கப்பட்டதற்குக் காரணம், எல்லா ஜனங்களும் இவ்விஷயங்களில் தங்களுடைய புத்தியை செலுத்தித் தற்காலத்தில் எருதுகளை வண்டிகளில் பூட்டுகிற விதங்களைக்காட்டிலும் மேலான விதங்களைக் கண்டுபிடிக்க முயலும்படி யவர்களைத் தூண்டவேண்டு மென்பதே. வருகிற வருஷக் காட்சியில் இன்னும் அநேகர் இவ்வித உபாயங்களைக் கண்டுபிடித்து வருவார்களென்று நம்புகிறோம்.

இக்காட்சி அதிகதிருப்திகரமாக நடக்கும்படி உதவிபுரிந்த கனவான்களுக்கும் தங்களுடைய வேலையைப் பட்சபாதமில்லாமலும் அதிக சூக்ஷ்மத்துடனும் செய்த ஜட்ஜிகளுக்கும் அநேக வந்தனம் சமர்ப்பிக்கின்றனம்.

மைசூரில் கால்நடைகளின் காட்சி. 1912.

கடந்த ஜனுவரிமீ 4உ யன்று மைசூரில் நடத்தப்பட்ட கால்நடைகளின் காட்சி மிஸ்டர் வெதரால் துரையவர்களின் அக்கிராசனாதிபத்தியத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. வருஷந்தோறும் மைசூரில் நடத்தும்படி ஏற்பாடு செய்யப்பட்டு நடந்துவருகிற காட்சிகளில் இது மூன்றாவதாகும். இவ்வருஷக் காட்சியைத் தொடங்கும்பொழுது அக்கிராசனாதிபதியாகிய மிஸ்டர் வெதரால் துரையவர்கள் அங்கு வந்திருந்த ஜனங்களைப் பார்த்துச் சந்தோஷமடைந்து இதற்கு முன் நடத்தப்பட்ட காட்சிகளைக்காட்டிலும் இது முக்கியமானதென்றும் இப்படிப்பட்ட காட்சிகளின் பிரயோஜனம் எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடியால் அதைப்பற்றி அதிகமாய்ச் சொல்லவேண்டிய தனாவசியமென்றும் சொன்னார். 1910-ம் வருஷத்தில் நடந்த காட்சியில் 4,000 கால்நடைகள் விற்பனையாயின. சென்ற வருஷத்தில் விற்கப்பட்டவை 9,000. அதாவது முன் வருஷத்தைக்காட்டிலும் இருமடங்குக் கதிகம். இவ்வருஷம் அங்கு கொண்டுவரப்படுகிற ஜந்து ஒன்றுக்கு ஒரு அணா கட்டணம் ஏற்படுத்தியிருந்தபோதிலும் இதற்கு முந்திய வருஷங்களைக்காட்டிலும் அதிகமாகவே கொண்டுவரப்பட்டன. மைசூருக்குச் சுற்றுப்புறங்களில் சில நேர்த்தியான ஜாதி மாடுகளை வளர்க்கிறார்களென்றும் சில காலத்திற்குள் மைசூர்க் காட்சியைக் கண்டு செல்கிற மற்ற ஜில்லா ரயத்துகளும் தம்முடைய கால்நடைகளை நன்றாய் வளர்ப்பார்களென்றும் அவர் சொன்னார். பயிர்த்தொழிலிலும் வியாபாரத்திலும் கால்நடைகள் உபயோகமுள்ளவையா யிருப்பதினால் இவ்வித காட்சிகள் இருதிறத்தாருக்கும் பயனைத் தருவனவா யிருக்கின்றன. வர்த்தகர்களுக்கும் வண்டியோட்டுகிறவர்களுக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் 13 கை உயரமுள்ள மட்டக்குதிரைகள் உபயோகமுள்ளனவாகையால் அவ்வகைக் குதிரைகளில் நேர்த்தியாயிருப்பனவற்றிற்கென்று இரண்டு வெகுமதிக ளளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. வழக்கப்பிரகாரம் அமிர்த மஹால் டிபார்ட்மெண்டுக் கதிகாரியான மிஸ்டர் நஞ்சுண்டராவ் அர்ஸ் அவர்கள் பிரசித்தமடைந்த அமிர்த மஹால் ஜாதிக் கால்நடைகளை அக்காட்சிக்குக் கொண்டுவந்தார். அவைகளி லநேகம் ஏலத்தில் விற்கப்படுமாகையால் கிருஷிக்காரர் அந்த சமயத்தை வீணாக்காமல் தங்களுடைய கால்நடைகளினபிவிருத்தியின்நிமித்தம் நல்ல ஜாதி எருதுகளை வாங்கிக்கொள்ளலாமென்று சொன்னார்.

வியவசாய விஷயங்களைச் சம்பந்தப்பட்ட வகுப்பில் உத்தியோகஸ்தாயிருக்கிற டாக்டர் கோல்மன் துரையவர்கள் பயிர்த்தொழிலுக் குபயோகமாகும்படி புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட அநேக நூதன கிருஷிக் கருவிகளை யக்காட்சிக்கு அனுப்புவித்து அவைகளின் பிரயோஜனத்தைப்பற்றி ரயத்துகளுக்கு உபந்நியசிக்கும்பொருட்டுத் தம் கீழ் உத்தியோகஸ்தர்களி லொருவரை அனுப்பினார். அக்கருவிகளைப் பார்த்தும் அந்த உபந்நியாசத்தைக் கேட்டும் எல்லாரும் புத்திசாலிகளாகி வியவசாயத்தை விர்த்திசெய்து கொள்வதற்காகத் தக்க முயற்சி யெடுத்துக் கொள்வார்களென்று நம்புகிறோம்.

உபந்நியாசங்களெல்லாம் முடிந்தபிறகு எல்லாரும் காட்சியைக் கண்டு அதிகச் சந்தோஷமடைந்தார்கள்.

வர்த்தமானக் குறிப்புகள்.

1. **ஜீ. ஹி. நி. சங்கத்தின் 31–வது வருஷாந்த மஹா சபை.** — பிரதி வருஷமும் நடந்தேறிவருகிற இச்சங்கத்து மஹா சபை சென்ற மார்ச்சுமீ 23உ யன்று பாங்குவெடிங் ஹாலில் அதிக வைபவத்துடன் நடத்தப்பட்டது. மகிமைபொருந்திய கவர்னர் லார்டு கார்மைகேல் துரையவர்கள் அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்தார்.

2. **வெகுமதி பெறுவதற்காக அனுப்பப்பட்ட வியாசங்கள்.**—வெகுமதிகள் பெறுவதற்காகப் பல கலாசாலை பாடசாலைகளிலிருந்து மாணாக்கர்க ளநேகர் செல்வமாய் வளர்க்கும் ஜந்துக்களைப் பழக்குதலைப்பற்றி வியாசங்களெழுதி யனுப்பினார்கள். அவைகளில் 19 ஆங்கிலேய பாஷையிலும், 1 தெலுங்கிலும், 6 தமிழிலும், 2 மலையாளத்திலும் எழுதப்பட் டிருந்தன. ஆங்கிலேய பாஷையிலெழுதப்பட்டிருந்த 19 வியாசங்களில், 15 காலேஜ் மாணாக்கர்களாலும், 4 ஹைஸ்கூல் மாணாக்கர்களாலும் எழுதப்பட் டிருந்தன. காலேஜ் மாணாக்கர்களில் சென்னைக் கிறிஸ்தியன் காலேஜில் படிக்கிற எஸ். ஸ்ரீநிவாஸனுடைய வியாசம் அதிக நன்றாய் எழுதப்பட்டிருந்ததினால் அவருக் கொரு தங்கக் கீர்த்தி முத்திரைப்பதக்கம் அளிக்கப்பட்டது. ஹைஸ்கூல் மாணாக்கர்களில் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் படிக்கிற ஏ. வி. சுந்தரமென்கிற மாணவர் பல காலேஜ் மாணாக்கர்களைவிட அதிக நன்றாயெழுதியிருந்ததினால் அவருக்கும் ஒரு விசேஷ தங்கப்பதக்க மளிக்கப்பட்டது.

சுதேச பாஷைகளி லெழுதப்பட்ட வியாசங்களில் மாயவரம் முனிஸிபல் ஹைஸ்கூலில் படிக்கிற யன். வெங்கடராமன் என்கிற மாணவருடைய வியாஸம் நேர்த்தியாயிருந்ததினா லவருக் கொரு வெள்ளிப்பதக்க மளிக்கப்பட்டது.

3. **ஜந்துக்க ளிளைப்பாறுவதற் கொரு ஆவரணம்.**—ஜீ. ஹி. நி. சங்கத்தாரி னதிகாரத்தின்கீழ் சென்னை எழும்பூரில் தென்னிந்தியா ரெயில்வே ஸ்டேஷனுக் கருகில் மேல் அசைலம் சாலையில் தன் குமாரனுடைய ஞாபகார்த்தமாக ஜந்துக்க ளிளைப்பாறுவதற்கு ஒரு ஆவரணங் கட்டவேண்டுமென்று கமலாவதி தாயாரம்மாளுடைய உயிலில் எழுதப்பட்டபடி மெஸ்ஸர்ஸ் வி. வி. ராமாநுஜஞ்செட்டி அன்டு ஸன்ஸ் கம்பெனியார் ஒரு ஆவரணத்தைக் கட்டினார்கள். அது ஸ்டேஷனுக்குச் சமீபமாயிருப்பதினால் அதிக உபயோகமுள்ளதா யிருக்குமென் றெண்ணுகிறோம்.

4. **ஆமைகளின் நித்திரை.**—ஆமைகளை வளர்க்கிறவர்கள் அவை மாரிகாலத்தில் தூங்குவதைக் கவனித்திருக்கலாம். ஆகையால் அவைகளை மழைக்காலத்தில் தோட்டங்களில் விட்டுவைக்கக் கூடாது. அப்படி விடப்பட்டால் எங்காவதோர் மூலையில் ஒரு வளை தோண்டிக்கொண்டு அதில் மறைந்து பலநாள்வரையில் வெளியே வரா. அக்காலத்தி லவைகளை யொரு பெட்டியில் கொஞ்சம் மண்ணைப்போட்டு அதில் விட்டு உஷ்ணமான அறைகளில் வைத்தால் அவை சுகமாய் நித்திரை செய்யும்.

5. **ஜந்துக்கள் அழுகிறதுண்டா?**—ஜந்துக்கள் அழுவதுண் டென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. வாலில்லாக் குரங்குகள் அழுவதை யநேகர் கண்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்கா தேசத்துப் பிரயாணிகளிற் பேர்போன கார்டன் கம்மிங் (Gordon Cumming) துரையவர்கள் ஒரு யானை சாகிற சமயத்தில் கண்ணீர்விட் டழுததாக எழுதியிருக்கிறார். அழுவதுமட்டு மல்லாமல் அநேக மிருகங்கள் சிரிப்பதாகவும் கூறுகிறார்கள்.

6. **புதைக்கும் வண்டுகள்.** — வண்டுகள் அவைகளின் ஆகாரத்தின்பொருட்டு இறந்த எலிகளையும் குருவிகளையும் கொண்டுபோய்ப் பத்திரமாய்ப் புதைத்துவைப்பது மிகவும் ஆச்சரியமாயிருக்கும். அவைகள் இரையைக் கொண்டுபோகிற மாதிரியையும் அதைப் பத்திரப்படுத்துகிற விதத்தையுங் கவனித்துப் பார்க்கிறவர்கள் அவை சுபாவவுணர்ச்சியினாலேயேயன்றி அதிக புத்திசாலித்தனமாயும் வேலை செய்வதை யறிவார்கள்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1912.